## மீன்வளப் பல்கலைக்கழகத்தில் சுதந்திர தின விழா நிகழ்ச்சிகள்

நாட்டின் 75வது சுதந்திர தினம் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக தலைமையிடத்தில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாண்புமிகு. துணைவேந்தர் முனைவர் கோ. சுகுமார் அவர்கள், தேசிய கொடியை ஏற்றி சுதந்திர தின உரை வழங்கினார்கள். தனது சுதந்திர தின உரையில், மாண்புமிகு துணைவேந்தர் அவர்கள் நமது நாட்டில் சுதந்திரத்திற்காக பாடுபட்ட, உயர்நீத்த, உழைத்த தியாகிகளையும் பல்வேறு தரப்பினைரையும் நினைவு கூர்ந்து அவர்களின் செயற்கரிய செயலை இன்றைய இளைஞர்கள் மனதில் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள். மேலும், தற்போதுள்ள கொரோனா பெரும் தொற்று காலத்தில் படித்த இளைஞர்களும், பல்கலைக்கழகத்தை சார்ந்துள்ள ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களும் கல்வி கற்கும் சூழ்நிலைக்கான நெருக்கடி நிலையை உணர்ந்து பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்பதை நினைவூட்டினார். பல்கலைக்கழகம் தனது பணியினை சிறப்பாக ஆற்ற வேண்டும், மக்களுக்கு பயன் கிடைக்க வேண்டும், என்ற நோக்கத்தில் இந்த கொரோனா பெருந்தொற்றை கட்டுப் படுத்த தடுப்பு ஊசி எடுத்து கொள்வதே சிறந்த ஒரு முயற்சியாகும் என்பதையும் எடுத்து கூறினார்.

சுதந்திர தின விழாவில் கொடியேற்றியதை தொடர்ந்து நடைப்பெற்ற எளிய நிகழ்ச்சியானது, பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். அ. சீனிவாசன் அவர்கள் வரவேற்புரையோடும், மீன்வளப் பொறியியல் கல்லூரி மாணவர்கள் ரம்யா மற்றும் நவநீத கிருஷ்ணன் ஆகியோரின் சிற்றுரையோடும், முனைவர் நா. மணிமேகலை, முதல்வர் (பொறுப்பு) அவர்கள் நன்றி உரையோடும் இனிதே நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், பல்கலைக்கழகத்தின் அனைத்து தரப்பினரும் கொரோனா தடுப்பு வழிமுறைகளை பின்பற்றி, சமுக இடைவெளியோடு, முகக்கவசம் அணிந்து பங்குபெற்று தங்களின் தேசப்பற்றை வெளிப்படுத்தினார்கள்.

15.08.21

விரிவாக்கக் கல்வி இயக்குநர்
தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்
நாகப்பட்டினம் - 611 001